# அரக்கோணம் நகராட்சி
## சாதாரண மன்ற கூட்ட அறிவிப்பு

**கூட்ட எண்.77** **நாள்.27.07.2021**

பொருள் சாதாரண மன்ற கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள்.30.07.2021 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சாதாரண கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக,

––––––

அரக்கோணம் நகராட்சி 30.07.2021 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள சாதாரண மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள்கள் விவரம்.

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**

**பொருள் எண்.01**

நகராட்சி ஆணையாளர் (பொ) மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜூன்/2021 மாதங்களின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.912 நாள்.30.07.2021**

**அலுவலக குறிப்பு :- பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.02**

அரக்கோணம் நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள மலிவு விலை அம்மா உணவகத்திற்கு தேவையான மளிகை பொருட்கள், அரிசி, காய்கறி மற்றும் தயிர், எரிவாயு உருளை வாங்கவும் மற்றும் அம்மா உணவகத்தில் பணிபுரியும் மகளீர் சுய உதவி குழு பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் வழிகாட்டுதலின்படி நிர்ணயி க்கப்பட்ட ஊதியம் வழங்குதல் உட்பட ஒரு மாதத்திற்கு தோராயமாக ரூ.5,00000/- வீதம் , 12 மாதங்களுக்கு 12X5,00000/- ரூ.60,00000/- (ஆறுபது இலட்சங்கள்) நகராட்சியின் அம்மா உணவகம் வங்கி கணக்கிலிருந்து **2021-2022** நிதி ஆண்டிற்கான செலவினத்தை மேற்கொள்ளவும் அரசு நிதி வரும் பட்சத்தில் ஈடு செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.860/அ2/2017)**

**தீர்மானம் எண்.913 நாள்.30.07.2021**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.03**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 11வது வார்டு பகுதியில் உள்ள கானூர் சாலை பெருமாள் கோவில் எதிரில் உள்ள சிறுபாலம் பல ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டுள்ளதால் தற்போது உள்ள சாலையை விட சுமார் 2 அடி தாழ்வாக உள்ளதால் மழை காலங்களில் மழைநீர் வெளியே செல்ல முடியாமல் தேங்கி அருகில் உள்ள குடியிருப்பு மற்றும் கோயில் உள்புரம் செல்வதால் பொது மக்களுக்கும், பக்தர்களுக்கும் மிகவும் இடையூராக இருப்பதால் மேற்கண்ட இடம் பார்வையிடப்பட்டு அடைப்பட்டுள்ள சிறு பாலங்களை உயர்த்தி புதிய 2 எண்ணிக்கை பாலங்கள் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2,30,000/-ற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் '**

**(ந.க.எண்.507/இ1/2021)**

**தீர்மானம் எண்.914 நாள்.30.07.2021**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.04**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.33 சோமசுந்திரம் நகர் பகுதியில் உள்ள 4வது தெருவிற்கு ஏற்கெனவே உள்ள ஆழ்துளை குழாய் கிணற்றினை மின்விசை பம்ப்பாக மாற்றி தரும்படி கோரிக்கை விடுத்தனர். இதன்படி மேற்கண்ட இடம் பார்வையிடப்பட்டு ஏற்கெனவே உள்ள ஆழ்துளை குழாய் கிணற்றில் உள்ள அடிபம்பை மாற்றி புதியதாக சிறு மின் விசை பம்பாக மாற்ற தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1,00,000/- நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.508/இ1/2021)**

**தீர்மானம் எண்.915** **நாள்.30.07.2021**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.05**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 26 வது வார்டு பகுதியில் உள்ள அம்மன் கோயில் தெருயில் உள்ள இயந்திர மாக்கி II பைம்புகளை மாற்றி புதியதாக சிறுமின் விசை பம்பு அமைத்துத தருமாறு இப்பகுதியின் முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் கொரிக்கை விடுத்தனர். இதன்படி மேற்கண்ட இடம் பார்வையிடப்பட்டு ஏற்கெனவே உள்ள கைபம்பினை மாற்றி புதியதாக சிறு மின் விசை பம்பாக மாற்ற தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1,00,000/-ற்கு நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.507/இ1/2021)**

**தீர்மானம் எண்.916** **நாள்.30.07.2021**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.06**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள 8வது வார்டு அருந்ததி பாளையம் பகுதியில் உள்ள பொது மக்கள் கழிப்பறை வசதி கோரி அரக்கோணம் சட்ட மன்ற உறுப்பினர் அவர்களின் மூலமாக கோரிக்கை விடுத்துள்ளனர். இதன்படி மேற்கண்ட இடம் பார்வையிடப்பட்டு அந்த பகுதியில் புதியதாக கட்டிடம் கட்ட ஏதுவாக இடம் ஏதுமில்லாத்தால் அருகில் உள்ள கால்வாயின் மீது நம்ம டாய்லட் மாதிரியான வடிவமைக்கப்பட்ட கழிவறை 2 எண்ணிக்கைகள் குடிநீர் குழாய் இணைப்பு, தொட்டி மற்றும் கழிவு நீர் வெளியேற்றும் குழாய் வடிவமைப்புடன் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1,90,000/-ற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.507/இ1/2021)**

**தீர்மானம் எண்.917** **நாள்.30.07.2021**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.07**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட விண்டர்பேட்டை, ப.உ.சண்முகம் தெருவில் மழைநீர் கால்வாய் வசதி வேண்டி அப்பகுதியில் உள்ள பொது மக்கள் கோரிக்கை விடுத்ததை ஏற்று மேற்கண்ட இடம் பார்வையிடப்பட்டு மேற்கண்ட பகுதியில் மழை நீர் கால்வாய் அமைக்க தயார்செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.290000/-ற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.507/இ1/2021)**

**தீர்மானம் எண்.918 நாள்.30.07.2021**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.08**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சுவால்பேட்டை பகுதியில் உள்ள பாலசுப்பிரமணி தெருவில் உள்ள சிறுபாலத்தின் மேல் கான்கிரிட் தளம் உடைந்து பொது மக்கள் பயன்படுத்த மிகவும் சிரமமாக இருப்பதாக அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் புகார் தெரிவித்ததை அடுத்து மேற்கண்ட இடம் பார்வையிடப்பட்டு பகுதடைந்துள்ள மேல் கான்கிரிட் தளம் மற்றும் சாய்வு தளம் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.20000/-ற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.507/இ1/2021)**

**தீர்மானம் எண்.919 நாள்.30.07.2021**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.09**

இந்நகராட்சியில் கீழ்காணும் பணிகளுக்கு 20,07,2021 அன்று ஒப்புந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ எ ண் | பணியின் பெயர் | மதிப் பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | **பொது நிதி** | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1 | நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 22.பாலசுந்தரம் தெருவில் பழுதடைந்துள்ள சாலையை தற்காலிகமாக செப்பனிடுதல் | 2.40 | திருசதீஷ்குமார்.வி . | 0.03% | திரு . ரமேஷ்பாபு.எஸ் | 2.36% |
| 2 | நகராட்சிக்குட்பட்ட ஏ எம்.பி.சர்ச் மற்றும் அம்பேத்கர் நகர் பகுதியில் உள்ள பொது கழிப்பிடங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 2.80 | திருமுனுசாமி.கே. | 0.12% | திரு சண்முகம்.ஆர். | 0.41% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | அரக்கோணம் நகராட்சி அம்மா உணவகத்தில் சமையலறை, டைல்ஸ் பதித்தல், குடிநீர் குழாய், மின்சார பணிகள் பராமரிப்பு பணி செய்தல் மற்றும் சோமசுந்தரம், ரத்தன் சந்த் நகர் நுன் உரக்கிடங்கில் உள்ள Conveyor சரிசெய்தல். | 1.50 | திருசதீஷ்குமார்.வி . | 0.07% | திரு . ரமேஷ்பாபு.எஸ் | 0.931% |
| 4 | நகராட்சி பகுதிகளில் உள்ள சிறு பாலங்களில் சாய்வு தளம் அமைத்தல். | 4.00 | திருமுனுசாமி.கே. | 0.02% | திரு சண்முகம்.ஆர். | 0.055% |
| 5 | நகராட்சி அலுவலக வளாகத்தில் சமுதாய அமைப்பாளருக்கு கட்டிடம் அமைத்தல். | 1.70 | திருசதீஷ்குமார்.வி . | 0.02% | திரு . ரமேஷ்பாபு.எஸ் | 0.19% |
| 6 | நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 22.லட்சயனார் தெருவில் மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 3.50 | திருசதீஷ்குமார்.வி . | 0.22% | திரு . ரமேஷ்பாபு.எஸ் | 0.01% |

**அலுவலக குறிப்பு : வரிசை எண் 1 .முதல் வரையிலான பணிகளுக்கு மேற்படி 7 வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.887/இ1/2019)**

**தீர்மானம் எண்.920** **நாள்.30.07.2021**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.10**

இந்நகராட்சியில் கீழ்காணும் பணிகளுக்கு 23.07.2021 அன்று ஒப்புந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ எ ண் | பணியின் பெயர் | மதிப் பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | **பொது நிதி** | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகித ம் |
| .1 | நகராட்சி அலுவலக வளாகத்தை சுற்றிலும் மழை நீர் தேங்கமால் உயர்த்துதல் மற்றும் அண்ணா தெரு விரிவாக்கம் பகுதியில் தற்காலிக சாலை அமைத்தல். | 9.00 | திருசதீஷ்குமார்.வி . | 0.01% | திரு . ரமேஷ்பாபு.எஸ் | 0.65% |

| | | | |
|---|---|---|---|
| .2 | **<u>சத்துணவு திட்டம்</u>**<br>நகராட்சிக்கு சொந்தமான கிருபில்ஸ்பேட்டை நகராட்சி ஆரம்ப பள்ளியில் சத்துணவு மையம் அமைத்தல் | 4.50 | ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. |

**அலுவலக குறிப்பு : வரிசை எண் 1 .முதல் வரையிலான பணிகளுக்கு மேற்படி 2 வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.887/இ1/2019)**

**தீர்மானம் எண்.921 நாள்.30.07.2021**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.11**

இந்நகராட்சி பகுதியில் கொரானா வைரஸ் தடுப்பு நடவடிக்கை குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த கீழ்காணும் விவரப்படி "பொதுமக்களின் கவனத்திற்கு கோவிஷீல்டு- கோவாக்சின் தடுப்பூசி தேவையில்லை அச்சம்" என்ற வாசகம் அடங்கிய ஸ்டிக்கர் அச்சடித்தல் மற்றும் கொரானா -19 புள்ளி விவரப்பட்டியல் (இரண்டு பக்கங்கள் அச்சடித்தல்) ஆகியவை அச்சடிக்க உள்ளூர் மற்றும் வெளியூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

| **வ எ. ண்** | **விவரம்** | **எண்ணிக்கை** | **THE GEORGE TOWN MULTI PURPOSE INDUSTRIAL CO-OPERATIVE SOCIETY LTD. CHENNAI<br>தொகை ரூ** | **PK FORMS MGR NAGAR CHENNAI<br>தொகை ரூ** | **ANNAI SIVAKAMI WOMENS INDUSTRIAL CO-OPERATIVE SOCIETY LTD. CHENNAI<br>தொகை ரூ** |
|---|---|---|---|---|---|
| 1 | பொதுமக்களின் " கவனத்திற்கு -கோவிஷீல்டு கோவாக்சின் தடுப்பூசி "தேவையில்லை அச்சம் என்ற வாசகம் அடங்கிய ஸ்டிக்கர் அச்சடித்தல் | 15000 | **14.75** | **15** | **16** |
| 2 | கொரானா 19-புள்ளி விவரப்பட்டியல் இரண்டு பக்கங்கள் அச்சடித்தல் )SURVEY FORM( | 10000 | **4.20** | **4.50** | **5** |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய **THE GEORGE TOWN MULTI PURPOSE INDUSTRIAL CO-OPERATIVE SOCIETY LTD. CHENNAI,** அவர்களுக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும், அதற்கான தோராய செலவின தொகை வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலக குறிப்பு : 1, மன்றம் அனுமதிக்கலாம்**

**2, தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் அதற்கான தோராய செலவின தொகை வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மானம் எண்.922** **நாள்.30.07.2021**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.12**

மக்காத குப்பைகளை தரம் பிரித்து சேகரித்து On site Composting மற்றும் Micro Compost Centre (MCC) தொட்டிகளில் சேர்க்கும் பணிக்கும், 36வார்டுகளிலுள்ள தெருக்களின் பின்புறத்தில் அமைந்துள்ள சந்துகளில் உள் குப்பைகளை மற்றும் கால்வாய்களை சுத்தம் செய்தல், தூர்வாருதல், தெருக்களை பெருக்குதல் போன்ற பணியினை மேற்கொள்ள இந்நகராட்சியில் உள்ள 116துப்புரவு பணியாளர்களை கொண்டு முழுமையாக அப்புறப்படுத்த முடியாத காரணத்தினால் இந்நகராட்சிக்கு கூடுதலாக மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி அடிப்படையில் 195பணியாளர்களை நியமித்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் ,சென்னை, அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்/30813.J 2018/3நாள்.11.12.2018:ல் உத்தரவு வழங்கப்பட்டு ஆணையாளர், அரக்கோணம் நகராட்சி அவர்களின் பணி உத்திரவு ந.க.எண் /2018/2835எச் 1நாள்-30.07.2020 :ல் ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், அரக்கோணம் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு 01.08.2020ம் தேதி முதல் இது நாள் வரையிலும் 195தூய்மை பணியாளர்களை கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணி தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது .இந்நிலையில் 31.07.2020தேதியுடன் ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், அரக்கோணம் நிறுவனத்திற்கு பணி உத்திரவு முடிவடைவதாலும் தற்போது கொரானா தொற்று உலகம் முழுவதும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாலும் நகராட்சி நிர்வாக ஆணையர் ,சென்னை, அவர்களின் நிர்வாக அனுமதி டிசம்பர் மாதத்துடன் முடிவடைவதாலும் இப்பொருள் குறித்து ஒப்பந்தப்புள்ளி நீட்டிப்பு செய்திடவும் அல்லது புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள இயலாத நிலையில் தற்போது ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் வரை ஏற்கனவே பணி செய்து வரும் ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், அரக்கோணம் நிறுவனத்தின் மூலம் ஏற்கனவே பணியாளர்களை வழங்கி வரும் அதே மதிப்பீட்டில் மேற்படி நிறுவனத்தினரின் 23.06.2021ஆம் தேதிய சம்மத கடிதத்தின் பேரில் தொடர்ந்து 2 மாதங்கள் 01.08.2021)தேதி முதல் 30.09.2021வரை (பணி உத்திரவு வழங்கிடவும், அற்கான தோராய செலவினம் ரூ 53.00.லட்சத்திற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**

**தீர்மானம் எண்.923** **நாள்.30.07.2021**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.12**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான கைப்பம்புகள் மற்றும் சிறு மின்விசை பம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்து இயக்கி தருதல் பணிகளை மேற்கொள்ள தோராய செலவினம் மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியையும், பணிக்கான தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண். 507/2021/இ1)**

**தீர்மானம் எண்.924** **நாள்.30.07.2021**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**